APRIL 2025 |VOL.2, ISSUE NO.4

RMRL NEWSLETTER

A monthly bulletin of RMRL to educate, interpret, and inform

மதன் புரஸ்கார் புஸ்தகாலயா, நேபாளம்

நிலநடுக்கத்தைத் தாங்கும் மூங்கில் நூலகம்

முனைவர் சுந்தர் கணேசன், இயக்குநர், RMRL

முதன்மைச் சொற்கள்: மதன் புரஸ்கார், நேபாள மொழி, EAP, கமல் மணி தீக்ஷித், நூலகப் பயிற்சி

அரிய நூல்கள் மற்றும் ஆவணங்கள் முதலியவற்றை ஆவணக் காப்பகத்தில் பாதுகாப்பதோடு மட்டுமல்லாமல், பல்வேறு தனியார் நூலகங்களிலும் தனிநபர் சேகரிப்புகளிலும் பல அரிய நூல்கள், நூல் சாரா ஆவணங்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இலங்கை, பங்களாதேஷ், நேபாளம், மியான்மர் மற்றும் பூடான் ஆகிய அண்டை நாடுகளிலும் பல்வேறு அரசு சாரா நிறுவனங்கள் தங்கள் மொழி இலக்கியங்கள் மற்றும் ஆவணங்களைப் பாதுகாத்து வருகின்றன.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தைப் போலவே நேபாளத்தில் தனிநபர் சேகரிப்பாகத் தொடங்கப்பட்டதுதான் மதன் புரஸ்கார் புஸ்தகாலயா. மதன் புரஸ்கார் புஸ்தகாலயா, நேபாள மொழியில் வெளிவந்த புத்தகங்கள், இதழ்கள் மற்றும் அரிய ஆவணங்களைச் சேகரித்துப் பாதுகாத்துவரும் முக்கிய நூலகமாகும். இந்நிறுவனத்துடன் கடந்த 25 ஆண்டுகளாக ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம் இணைந்து செயல்பட்டுவருகிறது.

மதன் புரஸ்கார் புஸ்தகாலயா 1955ஆம் ஆண்டில் கமல்மணி தீக்ஷித் என்பவரால் துவங்கப்பட்டது. இவர் 1940களில் தனது பள்ளிப் பருவத்தில் பல்வேறு வகையான நூல்களைச் சேகரிக்கத் தொடங்கினார். தனிப்பட்ட புத்தகச் சேகரிப்பாகத் தொடங்கி பின்னர், பல இலக்கியவாதிகள், அறிஞர்கள், மற்றும் கல்வி நிறுவனங்களின் பங்களிப்பால் அவரது நூலகம் விரிவடைந்தது. 1985-இல் அரசாங்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு நிறுவனமயமாக்கபட்ட இந்த நூலகத்திற்கு கமல்மணி தீக்ஷித் 2016இல் இறக்கும் வரை தலைவராக இருந்தார். அவருக்கு பின்னர், அவரது

மகன் கணக்மணி தீக்ஷித் தலைவராகப் பொறுப்பேற்று வழிநடத்தி வருகிறார். மதன் புரஸ்கார் புஸ்தகாலயா ‘மதன் புரஸ்கார்’ மற்றும் ‘ஜகதம்பா ஸ்ரீ’ ஆகிய நேபாளத்தின் மிக முக்கியமான இலக்கிய விருதுகளை வழங்கிவருகிறது.



கமல்மணி தீக்ஷித்

இந்நூலகத்தின் சேகரிப்புகளில் நூல்கள் மட்டுமன்றி இதழ்கள், செய்திமடல்கள், சுவரொட்டிகள், துண்டுப் பிரசுரங்கள், விளம்பரப் பதாகைகள், நாட்காட்டிகள், கையெழுத்துப் பிரதிகள், அரசியல் அறிக்கைகள், கடிதங்கள், வரைபடங்கள், புகைப்படங்கள், ஓவியங்கள், திரைப்படக் காட்சிகள், உரைகள், சுவர் ஓவியங்களின் படங்கள், அழைப்பிதழ்கள், மற்றும் ஒலிப்பதிவுகள் போன்றவை அடங்கும். ஆவணச் சேகரிப்பு, நூற்பட்டியல் தயாரித்தல், ஆவணப் பாதுகாப்பு, மற்றும் எண்ணிமப்படுத்துதல் மூலம் நேபாள இலக்கியம், பண்பாடு மற்றும் வரலாற்றை எடுத்துக்காட்டும் ஒரு பெரும் ஆவணக் காப்பகமாக மாறியுள்ள இந்த நூலகம் ஆராய்ச்சியாளர்களுக்கும் மாணவர்களுக்கும் ஒரு முக்கிய ஆதாரமாக விளங்கிவருகிறது.

மதன் புரஸ்கார் புஸ்தகாலயாவுடன் ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தின் முதல் தொடர்பு தில்லியில் ஏற்பட்டது. சிகாகோ பல்கலைக்கழகமும் ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகமும் இணைந்து 2000ஆம் ஆண்டு தில்லியில் தெற்காசிய ஒருங்கிணைந்த நூற்பட்டியல் (South Asia Union Catalogue) என்கிற ஒன்றைத் தயாரிப்பதற்கான கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தோம். அந்நிகழ்வில் நேபாளத்தைச் சேர்ந்த மதன் புரஸ்கார் புஸ்தகாலயா, ஹைதராபாத்தைச் சேர்ந்த சுந்தரய்யா விஞ்ஞான கேந்திரம் (SVK), கொல்கத்தாவைச் சேர்ந்த Centre for Studies in Social Sciences, மற்றும் தில்லியைச் சேர்ந்த The Library of Congress Office போன்ற நிறுவனங்கள் கலந்துகொண்டு தங்கள் பங்களிப்பை அளித்தனர். இக்கூட்டத்தில் தெற்காசிய மொழிகளில் இருக்கும் நூல்களைப் பட்டியலிட்டு ஒரு தளத்தில் கொண்டுசேர்ப்பது போன்ற தலைப்புகளில் கலந்துரையாடல் நடந்தது. அதன்படி இணையத்தில் தெற்காசிய ஒருங்கிணைந்த நூற்பட்டியல் (South Asia Union Catalogue - SAUC) எனும் தகவல் தளத்தினை உருவாக்கி, அதில் அனைத்து தெற்காசிய மொழிகளின் நூற்பட்டியலையும் இணைக்கும் முடிவு எட்டப்பட்டது.

இதற்கான நிதியை ஃபோர்டு ஃபவுண்டேஷனிடம் பெறவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இக்கூட்டத்தில் மதன் புரஸ்கார் புஸ்தகாலயாவின் நிறுவனர் கணக்மணி தீக்ஷித் கலந்துகொண்டார். அங்கு அவருடன் முதன்முதலில் பேசிய ஒரு விஷயம் என் நினைவுக்கு வருகிறது. “தெற்காசியாவின், தெற்கில் இருக்கும் ஒரு நிறுவனமும் வடக்கில் இருக்கும் ஒரு நிறுவனமும் இணைந்து ஒரு புள்ளியில் பணியாற்றுவதற்கான சாத்தியக்கூறு இருக்கிறது” என்று அப்போது அவர் கூறினார்.

2004ஆம் ஆண்டு மொழி அறக்கட்டளையிலிருந்து பிரிந்து ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை (RMRL Trust) உருவாக்கப்பட்டது. அதனை உருவாக்கிய மூவருள் நானும் ஒருவன். அச்சமயம் அறக்கட்டளைக்கு ஒரு இலச்சினை (Logo) தேவைப்பட்டபோது, நான் இலச்சினையை வடிவமைக்க, அதனை மதன் புரஸ்கார் புஸ்தகாலயா செம்மைப்படுத்தியது.

அதற்குப் பின் பல்வேறு நிகழ்வுகளில் மதன் புரஸ்கார் புஸ்தகாலயாவுடன் இணைந்து பணியாற்றும் வாய்ப்பு கிடைத்தது. கொல்கத்தாவில் Centre for Studies in Social Sciences-இல் ஒரு பயிற்சிப் பட்டறை நடத்தப்பட்டது. இதில் பல நிறுவனத்தார் கலந்துகொண்டு பயிற்சி பெற்றனர். அதற்குப் பின் நேபாளில் 2008ஆம் ஆண்டு SAUC-இன் அடுத்த கூட்டம் நடைபெற்றது. அதில் ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம் சார்பாக என்னுடன் பிரகாஷ், சுவிதா மற்றும் ஞானசேகர் ஆகியோர் கலந்துகொண்டனர். அங்கு நான் நுண்படம் தொடர்பாகவும், பிரகாஷ் மற்றும் ஞானசேகர் நூற்பட்டியல் தொடர்பாகவும் பயிற்சியளித்தோம்.

அக்காலகட்டத்தில் மதன் புரஸ்கார் புஸ்தகாலயாவைச் சேர்ந்தவர்களுக்கு புத்தகப் பாதுகாப்பு மற்றும் நூற்பட்டியல் தயாரிப்பு போன்றவற்றில் போதிய பயிற்சி இல்லாததால் மரபார்ந்த முறைகளையே பின்பற்றிக்கொண்டிருந்தனர். சர்வதேசத் தரத்திலான முறைகளைப் பின்பற்றிக்கொண்டிருந்த ரோஜா

முத்தையா ஆராய்ச்சி நூலகம் மதன் புரஸ்கார் புஸ்தகாலயாத்துடன் தனது செயல்முறைகளைப் பகிர்ந்து கொள்வதற்கான முன்னெடுப்பை மேற்கொண்டது அதன்படி அந்நிறுவனத்தைச் சார்ந்த அமர் குரூங் என்பவர் ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தைப் பார்வையிட அனுப்பப்பட்டிருந்தார். ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தைப் பார்த்து ஒரு முன்மாதிரியாக எடுத்துகொண்டு, நாங்கள் கொடுத்த ஆலோசனையின் பேரில் மதன் புரஸ்கார் நூலகத்திற்கு எந்த மாதிரியான ஒரு குழு தேவை என்பதைப் புரிந்துகொண்டனர். நூற்பட்டியல் தயாரிப்பு, ஆவணப்பாதுகாப்பு மற்றும் நுண்படமெடுத்தல் போன்றவற்றிற்கு தனித்தனி ஆட்கள் கொண்ட குழுவை உருவாக்கினர். அதன் பின்னர் தொடர்ந்து பலமுறை மதன் புரஸ்கார் புஸ்தகாலயாவைச் சார்ந்தவர்கள் நூற்பட்டியல் தயாரிப்பு, ஆவணப் பாதுகாப்பு போன்றவற்றிற்குப் பயிற்சி பெற ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்திற்கு வந்துள்ளனர். அவர்கள் இங்கேயே ஒருமாத காலம் கூடத் தங்கிப் பயிற்சி பெற்றனர்.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தைப் போலவே மதன் புரஸ்கார் நூலகமும் Endangered Archives Programme (EAP)-இன் நிதி நல்கையைப் பெற்று பல அரிய ஆவணங்கள், பழமையான இதழ்கள் மற்றும் நூல்களைச் சேகரித்துப் பாதுகாப்பதற்கான முன்னெடுப்பைத் துவங்கியது.

Koha OPAC (Online Public Access Catalog) மென்பொருள் தொழில்நுட்பங்களில் மதன் புரஸ்கார் புஸ்தகாலயா சிறந்து விளங்கியது. அவர்களிடமிருந்து ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம் தொழில்நுட்ப உதவிகளைப் பெற்று Koha OPAC மென்பொருளைப் பயன்படுத்தத் தொடங்கியது.

2005ஆம் ஆண்டில், ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தில் மெட்ராஸ் தொழில்நுட்ப நிறுவனத்தின் AU-KBC ஆராய்ச்சி மைய உதவுயுடன் Koha மென்பொருளில் தமிழ் யூனிகோட் இயக்க, பரிசோதனை செய்யப்பட்டது.

2010ஆம் ஆண்டு மதன் புரஸ்கார் புஸ்தகாலயாவைச் சார்ந்தவர்கள் வேறொரு பயிற்சிக்கு வந்திருந்தபோது புத்தகங்களை இடம் மாற்றும் பணியில் எங்களுடன் இணைந்து செயல்பட்டனர். மு. அருணாசலம் அவர்களின் சேகரிப்பினை அவரது மகன் சிதம்பரனார் அவர்கள் ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்திற்குத் தருவதற்கு இசைந்தார். அதன்படி ஏறத்தாழ 10,000 நூல்களை ஒரேநாளில் அட்டைப் பெட்டிகளில் அடுக்கி திருச்சிற்றம்பலம் எனும் ஊரிலிருந்து ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்திற்கு எடுத்துச்செல்ல ஏற்பாடு செய்யப்பட்டது. ஐயா சிதம்பரனார் புத்தகங்களையும் கொடுத்து, எங்கள் அனைவருக்கும் விருந்தும் வைத்து, நன்றாகக் கவனித்து அனுப்பினார். இதன்மூலம் பயிற்சிக்கு வந்திருந்த மதன் புரஸ்கார் புஸ்தகாலயத்தினர் ஒரு நூலகத்தினை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு மாற்றுவது எப்படி என்பது குறித்தும் நேரடியாக அறிந்துகொண்டனர்.

நிலநடுக்கத்தைத் தாங்கும் மூங்கில் நூலகம்!

2015ஆம் ஆண்டில் ஏற்பட்ட மிகப்பெரிய நிலநடுக்கத்தின் பாதிப்பிலிருந்து மதன் புரஸ்கார் புஸ்தகாலயமும் தப்பவில்லை. பேரதிர்ச்சிக்குள்ளாக்கிய இந்நிகழ்வைத் தொடர்ந்து நான் அங்கு நூலகத்தைப் பார்வையிடச் சென்றிருந்தேன். கட்டிட இடுபாடுகளுக்கிடையில்







இருந்து புத்தகங்களை மீட்டெடுத்துக் கொண்டிருந்தனர். ஆலோசனை கொடுக்க சென்றிருந்த நான் ஒரு பூகம்பம் வரும் சூழலில் எப்படி நூலகப் பாதுகாப்பினைச் செய்ய வேண்டும் என்பதை நேரடியாகக் கண்டு கற்றுக்கொண்டேன். இனிவரும் நாட்களில் எப்படி நிலநடுக்கத்தைத் தாங்கும் வகையில் நூலகம் அமைக்கப்படவேண்டும் என்பது குறித்தும் கலந்துரையாடினோம். அதன்படி மூங்கிலைக்கொண்டு நிலநடுக்கத்தைத் தாங்கும்படியான நூலகத்தை வடிவமைத்துக் கட்டினர். மூங்கிலானது நெகிழ்வுத்தன்மை உடையது, நிலநடுக்கத்தின் அதிர்ச்சியில் காங்ரீட் கட்டடங்களைப் போல் உடைந்துவிடாமல் வளைந்துகொடுத்து அதிர்வைத் தாங்கிக்கொள்ளும். அப்படியே உடைந்தாலும் குறைவான எடையால் புத்தககங்களுக்கு அந்தளவிற்குப் பாதிப்பை ஏற்படுத்தாது. அதேபோல் இந்த மூங்கில் கட்டமைப்புச் சுற்றுச்சூழலுக்கு ஏற்றதாகவும், மரபார்ந்ததாகவும் இருக்கும்.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகமும், மதன் புரஸ்கார் புஸ்தகாலயமும் தங்கள் தாய்மொழிகளின் இலக்கிய மற்றும் பண்பாட்டு மரபுகளைப் பேணிவருகின்றன. இரண்டு நிறுவனங்களுக்கிடையிலான ஒத்துழைப்பு தமிழ் மற்றும் நேபாள மொழி ஆவணங்களைப் பாதுகாக்கும் முயற்சிகளை வலுப்படுத்தி இரு மொழிகளின் மரபுகளை பேணுவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. இதைப்போன்று தனியார் நிறுவனங்கள் ஒன்றோடொன்று இணைந்து செயல்பட்டுத் தங்கள் தொழில்நுட்பங்களையும் மரபார்ந்த முறைகளையும் பறிமாறிக்கொண்டால் அது நிறுவனங்களின் வளர்ச்சிக்கும் சமூகப் பண்பாட்டு ஒருங்கிணைப்பிற்கும் வழிவகுக்கும்.

நான் ஒரு முறை கமல்மணி தீக்ஷித்திடம் சொன்னேன் “ஐயா, நான் ரோஜா முத்தையாவைப் பார்த்ததில்லை. உங்களைத்தான் அந்த நிலையில் வைத்துப் பார்க்கிறேன் என்று.” அப்போது அவர் சிரித்தபடியே பல தகவல்களை

எனக்குச் சொன்னார். அவர் தமிழ்நாட்டிற்குப் பல முறை வந்ததாகவும், உப்பு கார்ப்பரேஷனில் பணியாற்றும் போது, சி. சுப்பிரமணியம் அவர்களுடன் தொடர்பில் இருந்ததாகவும், அவர் இல்லத் திருமணத்திற்காக சென்னைக்கு வந்ததாகவும் சொன்னார். இதுபோல பல தகவல்களைப் பகிர்ந்துகொண்டார். நூல் சேகரிப்பாள்ரகள் வெறும் சேகரிப்பாளர்கள் கிடையாது. அவர்கள் நல்ல கதை சொல்லிகளும் கூட.

“ தெற்காசியாவின், தெற்கில் இருக்கும் ஒரு நிறுவனமும் வடக்கில் இருக்கும் ஒரு நிறுவனமும் இணைந்து ஒரு புள்ளியில் பணியாற்றுவதற்கான சாத்தியக்கூறு இருக்கிறது ”

- கணக்மணி தீக்ஷித்

APRIL 2025 |VOL.2, ISSUE NO. 4

தமிழில் நூல், புத்தகம் என்ற சொற்கள்

சில விவாத குறிப்புகள் - பகுதி 01

முனைவர் சே. தனபால், ஆய்வாளர், RMRL

முதன்மைச் சொற்கள்: நூல், புத்தகம், பதிப்பு, சங்க இலக்கியம், தொல்காப்பியம், நன்னூல்

பஞ்சிதன் சொல்லாப் பனுவல் இழையாகச்
செஞ்சொல் புலவனே சேயிழையா-எஞ்சாத
கையே வாயாகக் கதிடரே மதியாக
மையிலா நூல் முடியும் ஆறு (நன்னூல் 24)

அறிமுகம்

தமிழில் நூல், புத்தகம் என்ற இரண்டு சொற்களும் பெருவழக்காகப் புழக்கத்தில் இருப்பவை. 'நூல்' என்ற சொல் தமிழ் மரபிலிருந்து எழுந்த சொல். இச்சொல் பண்டைய காலத்தில் இருந்தே தொடர்ந்து பயன்படுத்தியிருந்தாலும் வடமொழிகளின் தாக்கம் தமிழில் ஏற்பட்ட காலத்தில் இருந்து 'புத்தகம்' என்ற சொல்லும் பயன்பாட்டில் இருந்து வருகிறது. தமிழில் அச்சு இயந்திரம் பயன்பாட்டிற்கு வந்தபிறகு அச்சிடப்பட்ட பனுவலை 'புத்தகம்' என்றும், ஓலைச்சுவடிகளை 'நூல்' என்றும் அழைக்கத் துவங்கினர். இக்காலக்கட்டத்தில் இவ்விரண்டு சொற்களுக்கும் இடையில் நடைபெற்ற ஊடாட்டங்கள் ஒருவகையில் தமிழ் அச்சுப் பண்பாட்டின் பகுதியாக அமைகிறது. தமிழ் அச்சுப் பண்பாடு என்ற பெரும் புலம் தோற்றம் கொண்டு வளர்கையில் 'நூல்', 'புத்தகம்' ஆகிய இரண்டு சொற்களும் அதில் இடையீடு செய்துள்ளன என்றும் கூறலாம். தமிழ் அறிஞர் குழாம் இச்சொற்களைப் பயன்படுத்துகையில் அவற்றுக்கான ஆழமாகப் பொருளைக் கொண்டு பயன்படுத்தினர். அதன்வழி நூல், புத்தகம் என்ற சொற்கள் பண்டைய காலத்தில் பயன்படுத்தப்பட்ட விதம் குறித்தும் 18ஆம், 19ஆம் நூற்றாண்டில் அச்சுப் பண்பாட்டின் தோற்றப் பின்புலத்தில் இச்சொற்கள்பெற்ற இடம் குறித்தும் எடுத்துரைக்கும் வகையில் இரண்டு பகுதிகளாக இந்தக் குறிப்புரை அமையப்பெறுகிறது.


தொல்காப்பியம்
பொருளதிகாரம்
பேராசிரியம்.
மெய்ப்பாட்டியல், உவமவியல், செய்யுளியல், மரபியல்.
ராவ் பஹதூர் ச. பவானந்தம் பிள்ளை அவர்கள்
எப். ஆர். எச். எஸ். (லண்டன்.) எம். ஆர். ஏ. எஸ். (லண்டன்.)
[சென்னை சர்வகலாசாலையின் தமிழ்க் கல்விச்சபை, தமிழ் வியாசசபை இவற்றின் அங்கத்தினர். சென்னை 'கல்வி' இலாகாவைச் சேர்ந்த 'டெக்ஸ்ட்புக் கமிட்டி' அங்கத்தினர். சென்னை 'ஸ்கூல்புக் அண்ட் லிட்டரேச்சர் சொஸைட்டி' தமிழ்க் கமிட்டி அங்கத்தினர்.]
பதிப்பித்தது.
லாங்மென்ஸ் க்ரீன் அண்ட் கம்பெனியார்
167, மவுண்ட் ரோட், சென்னை.
பம்பாய், கல்கத்தா.
1917
[ரிஜிஸ்தர் செய்தது.]

தொல்காப்பியத்தில் 'நூல்' என்ற சொல்

தமிழ் உள்ளிட்ட திராவிட மொழிகள் அனைத்திலும் 'நூல்' என்ற சொல் பஞ்சு என்பதிலிருந்து பெறப்படுகிற நூலையே குறிப்பதாக அமைந்துள்ளது. இத்துடன் தமிழில் மட்டும் 'நூல்' என்ற சொல் கருத்துகளை உள்ளடக்கிய பொருளைச் சுட்டுகிறது (DEDR 3726). தமிழில் மட்டுமே அத்தகைய பரிணாமம் நிகழ்ந்துள்ளது. பண்டைய

இலக்கணமான தொல்காப்பியத்தில் இருந்தே நூல் என்ற சொல் பயன்பாட்டில் காணப்படுகிறது. தொல்காப்பியம் பொருளதிகாரத்தின் கடைசி இரண்டு இயல்களான செய்யுளியல், மரபியல் ஆகியவற்றில் நூல் குறித்து விரிவாகப் பேசப்படுகிறது. சொல்லதிகாரப் புறனடையில் 'நூல்' பற்றி காணப்படுவது பின்வருமாறு,

செய்யுள் மருங்கினும் வழக்கியல் மருங்கினும்
மெய் பெறக் கிளந்த கிளவி எல்லாம்
பல் வேறு செய்தியின் நூல் நெறி பிழையாது,
சொல் வரைந்து அறிய, பிரித்தனர் காட்டல்!.
(தொல். சொல். 463)

புறனடை என்பது குறிப்பிட்ட விதிகளுக்கு அப்பாற்பட்டவற்றைப் பொருத்திக் காண்பிப்பதாகும். இவ்வரிகளில் காணப்படும் "நூல்நெறி பிழையாது" என்பது ஏற்கனவே காணப்படும் நூல்களின் நெறி பிழையாமல் என்பதைச் சுட்டுவதாகும். இத்துடன் 'நூல்' என்ற சொல் குறித்து காணப்படும் இடங்களில் நூல் நவில் புலவர் (1411), என்மனார் புலவர் (1336), மொழிப் புலவர் (1598), யாத்தனர் புலவர் (1600) என்று தொல்காப்பியருக்கு முன்பிருந்தவர்கள் மேற்கோளாகச் சுட்டப்பட்டுள்ளனர். இதன்வழி நூல் குறித்த கருத்தாக்கம் தொல்காப்பியத்திற்கு முன்பே வரையறைகளோடு இருந்துள்ளதையும் இதன்வழி காணலாம்.

தொல்காப்பியத்தின் இறுதி இயலான மரபியலில் 'நூல்' பற்றி விரிவாகப் பேசப்பட்டுள்ளது. மரபிலிருந்து திரியாது சிறப்போடு கூடிய நூல்வகை இரண்டாகப் பிரிப்பர். ஒன்று 'முதல் நூல்', மற்றொன்று 'வழி நூல்'. முன்னோர்களால் செய்யப்பட்டது 'முதல் நூல்'. முதல் நூலின் வழியில் வருவது 'வழி நூல்'. 'வழி நூல்' நான்கு வகைகளாகப் பிரிக்கப்படுகிறது. முதல் நூலில் உள்ளவற்றைத் தொகுத்து நூலாக்கல், விரித்து நூலாக்கல், தொகுத்தும் விரித்தும் நூலாக்குதல், மொழிபெயர்த்தல் ஆகியன.

தொல்காப்பியர் காலத்தில் 'நூல்' என்பது செய்யுளைக் குறித்து நின்றது கவனிக்கத்தக்கது. உரை எழுதும் நிலையில் நூற்பாக்கள் எழுதுதல் வேண்டும். சுருக்கமாக உரை எழுதிய காண்டிகையும், பத்து வகைக் குற்றங்கள் இன்றி, நுண்பொருளாகிய முப்பத்திரண்டு வகை உத்தியொடு பொருந்தி வந்தால், அதனை 'நூல்' என்று நன்கு கற்றோர் கூறுவர் என்கிறது தொல்காப்பியம் (1598). தொல்காப்பிய விதிப்படி பண்டைய காலத்தில் 'நூல்' என்பது பத்து வகை குற்றங்கள் இன்றியும் முப்பத்திரண்டு வகை உத்தியோடு பொருந்தி இருத்தல் முக்கியமானது.



சங்க இலக்கியத்திலும் அதன்பிறகும் நூல், புத்தகம் என்ற சொற்கள்

சங்க இலக்கியத்தில் 40க்கும் மேற்பட்ட இடங்களில் 'நூல்' என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது (http://tamilconcordance.in/). அந்தச் சொல் இதில் 'பஞ்சாகிய நூல்' என்ற பொருளில் பல இடங்களிலும் 'கருத்துகள் கொண்ட நூல்' என்கிற பொருளில் சில இடங்களிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. அவற்றில் சில: நூல் அறி புலவ (நெடுநல் 59), நூல் நெறி மரபு (சிறுபா. 230) , நூல் அறி வலவ (அகம் 114), முது நூல் (அகம் 181).

திருக்குறள் உட்பட பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் 60க்கும் மேற்பட்ட இடங்களில் 'நூல்' என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. சங்க இலக்கியத்தில் இருந்து மாறுபட்ட நிலையில் 'நூல்' என்ற சொல் 'பஞ்சினால்


ஸ்ரீ
கணிமேதையார்
இயற்றிய
ஏலாதி,
மஹாவித்வான்
கோ. இராஜகோபாலப்பிள்ளையவர்கள்
இயற்றிய
உரையுடன்.
இது
சென்னைப் பச்சையப்பன் காலேஜ்
தமிழ்ப்பண்டிதர்
கா. ர. கோவிந்தராஜ முதலியாரால்
பார்வையிடப்பட்டது.
மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை,
87, தம்புசெட்டி வீதி, சென்னை.
1915
விலை அணா 6
Copyright Registered.

ஸ்ரீ
சமண முனிவர்கள் இயற்றிய
நாலடியார் மூலமும்
தெளிபொருள் விளக்க வுரையும்
★
உரையாசிரியர்கள்:
வை. மு. சடகோபராமாநுஜாசாரியர் ஸ்வாமி
சே. கிருஷ்ணமாசாரியர் ஸ்வாமி
விலை ரூ. 3—8—0

உண்டாகும் நூல்' என்பதைவிட அதிகமான இடங்களில் 'கருத்துகளைக் கொண்ட நூல்' என்ற பொருளிலேயே காணப்படுவது கவனிக்கத்தக்கது. இங்கு அடிப்படையில் அறம் குறித்துப் பேசுவதால் நூலைக் கற்றல், நூல் கல்வி என்பவற்றோடு 'நூல்' என்ற சொல் பரவலாக்கம் பெறுகிறது. கல்விக் கற்றல் பரவலாக்கம் அடைந்த நிலையில் அது சார்ந்த 'நூல்' என்ற சொல்லும் பரவலாக்கம் அடைகிறது எனலாம். இலக்கியத்தின்வழி 'நூல்' என்ற பொருளினுள் மாற்றம் ஏற்பட்டதையும் இங்கு காணலாம். இத்துடன் 'புத்தகம்' என்ற சொல்லும் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் இரண்டு இடங்களில் காணப்படுகின்றன. புத்தகம் என்ற சொல் சமஸ்கிருதத்தில் 'பொஸ்தக' என்றும் பாளியில் பொத்தாக என்றும் பிராகிருதத்தில் பொத்தா என்றும் பயன்படுத்தப்பட்டுள்ளது (A comparative dictionary of Indo-Aryan languages. 8413). நாலடியாரிலும் ஏலாதியிலும் 'புத்தகம்' என்ற சொல் காணப்படுகிறது. இவையிரண்டும் சமண நூல்களாக அறியப்படுபவை. சமணம் தமிழ்க் கல்வி வரலாற்றில் முக்கிய இடத்தைக் கொண்டுள்ளது. இதனையும் இச்சொல் பயன்பாட்டோடு இணைத்துப் பார்த்தல் வேண்டும். அவ்விரண்டு பாடல்களும் பின்வருமாறு,

புத்தகமே சால தொகுத்தும் பொருள் தெரியார்
உய்த்து அகம் எல்லாம் நிறைப்பினும் மற்று அவற்றை
போற்றும் புலவரும் வேறே பொருள் தெரிந்து
தேற்றும் புலவரும் வேறு (நாலடியார் 32-8)

ஊணொடு கூறை எழுத்தாணி புத்தகம்
பேணொடும் எண்ணும் எழுத்து இவை மாணொடு
கேட்டு எழுதி ஓதி வாழ்வார்க்கு ஈய்ந்தார் இம்மையான்
வேட்டு எழுத வாழ்வார் விரிந்து (ஏலாதி 63)

இரட்டைக் காப்பியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவற்றிலும் நூல் என்ற சொல், கருத்துகளைக் குறிக்கும் நூல் என்பதைச் சுட்டுவதாகப் பெரும்பாலான இடங்களில் கையாளப்பட்டுள்ளது. சிலப்பதிகாரத்தில், நல் நூல் (புகார்: 3-40), நல் நூல் புலவன் (புகார்: 3-44), நூல் நெறி (வஞ்சி: 28-224), உரை நூல் (புகார்: 5-136), மறை நூல் (மதுரை: 13-38) எனப் பயன்படுத்தப்பட்டுள்ளன. நூலோர், நூலவர் என்ற சொற்கள் பயன்பாட்டில் இருந்துள்ளன. ஆனால் மணிமேகலையில் நூல் என்கிற சொல் தவிர நூற்பொருள் என்ற சொல் நான்கு இடங்களிலும், நூற்பொருள்கள் என்ற சொல் ஒரு இடத்திலும் பயன்படுத்தப்பட்டுள்ளன.



குறிப்பாக, நூற்பொருள் உணர்ந்தோர் (மணி: 19-38), நூற்பொருள் யாது (மணி: 27-109), நூற்பொருள் யாவை (மணி: 27-168), தந்த நூற்பொருள் (மணி: 27-172), நூற்பொருள்கள் ஐந்து (மணி: 27-112) என்று பயன்படுத்தப்பட்டுள்ளன. மணிமேகலையின் 27ஆம் காதையான 'சமயக்கணக்கர் திறம்கேட்ட காதை' என்பது அடிப்படையில் சமய நூல்களுக்குள் காணப்படும் பொருள்களைச் சார்ந்து வெளிப்படுவதால் இங்கு 'நூற்பொருள்' என்ற சொல் முதன்மைபெறுகிறது.

இடைக்கால இலக்கியங்களில் நூல், புத்தகம் என்ற சொற்கள்

இடைக்காலத்தில் சமஸ்கிருதத்தின் தாக்கம் அதிகம் ஏற்பட்டிருந்த போதிலும் பக்தி இலக்கியங்களில் 'நூல்' என்ற சொல்லே அதிகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இத்துடன் 'புத்தகம்' என்ற சொல்லும் ஆங்காங்கே பயன்படுத்தப்பட்டுள்ளதும் கவனிக்கத்தக்கது. "புத்தகம் கை கொண்டு புலி தோல் வீக்கி புறம்பயம் நம் ஊர் என்று போயினாரே" (2216/4) என்று தேவாரத்திலும், "எழுதாத புத்தகத்து ஏட்டின் பொருளை" (2885/1) என்று திருமந்திரத்திலும் புத்தகம் என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளதைக் காணலாம்.

'நூல்' என்ற சொல்லையே தலைப்பாகக் கொண்ட 'நன்னூல்' 13ஆம் நூற்றாண்டில் தோன்றிய இலக்கணப் பிரதியாகும். இது 'நூல்' என்பதைப் பின்வருமாறு தெளிவாக விளக்குகிறது:

பஞ்சிதன் சொல்லாப் பனுவல் இழையாகச்
செஞ்சொல் புலவனே சேயிழையா-எஞ்சாத
கையே வாயாகக் கதிடரே மதியாக
மையிலா நூல் முடியும் ஆறு (நன்னூல் 24)

தன் சொற்கள் பஞ்சாகவும், செய்யுள் இழையாகவும், சொற்களை அறிந்த புலவன் நூற்கின்ற பெண்ணாகவும், குறையாத வாய் கையாகவும், அறிவு கதிராகவும், குற்றமில்லாத கல்வி நூலானது முடியும் வழி இது. (ஆறுமுகநாவலர் காண்டிகையுரை) அதாவது நூல் நூற்கும் பெண் பஞ்சால் தன் கைகளைக் கொண்டு கதிரின்மூலம் நூல் நூற்பதுபோல, புலவன் சொற்களின்மூலம் தன் வாயைக்கொண்டு அறிவால் நூலை நூற்கிறான் என்கிறது இச்செய்யுள்.

உரத்தின் வளம்பெருக்கி யுள்ளிய தீமைப்
புரத்தின் வளமுருக்கிப் பொல்லா - மரத்தின்
கனக்கோட்டந் தீர்க்குநூ லஃதேபோன் மாந்தர்
மனங்கோட்டந் தீர்க்குநூன் மாண்பு . (நன்னூல் 25)

உடம்பின் உள் இருக்கின்ற ஞான வளத்தை வளர்வித்து, நினைக்கப்பட்ட தீமையாகிய அஞ்ஞான வளத்தைக் கெடுத்து, கெட்ட மரத்தினது மிகுதியாகிய கோணலைப் போக்குகின்ற எற்று நூலின் அம்மாட்சிமை போலவே, மனிதருடைய மனத்தினது கோணலைப் போக்கும், கல்வி நூலினது மாட்சிமை ஆனது . (ஆறுமுகநாவலர் காண்டிகையுரை).

ஒரு மரத்தின் வளைவு நெளிவுகளைக் கண்டறிவதற்கு மரவேலை செய்யும் தச்சர்கள் பயன்படுத்தும் கருவி நூல் ஆகும். மரத்தின் வளைவைக் கண்டறிந்து அதனைச் சீர்செய்வதற்கு நூலைப் பயன்படுத்துவதுபோல மனிதனின் மனதில் உண்டாகும் கோணல்களைக் கண்டறிந்து அவன் மனக்கோளாறுகளை ஒழுங்குபடுத்தும் கருவியாக நூல் செயல்படும் என்கிறது நன்னூல் நூற்பா. நூல் என்பதற்கு நன்னூல் ஆசிரியர் பவனந்தியார் தரும் பொருள் விளக்கம் ஆழ்ந்து நோக்கத்தக்கது.

இவ்விரண்டு செய்யுள்கள் ‘நூல்’ என்ற சொல்லைத் தமிழ்ப் பண்பாட்டுப் பின்புலத்தில் எத்தகைய முறையில் வரையறை செய்யலாம் என்பதைத் தெளிவுப்படுகின்றன. ஒரு புலவன் தனது அறிவால் உண்டாக்குவது ‘நூல்’ என்றும், அது மனிதனை ஒழுங்குபடுத்தும் கருவி என்றும் இங்கு வரையறை உண்டாக்கப்படுகிறது.

மேற்கண்ட பல்வேறு விளக்கங்களின்வழி, ‘நூல்’, ‘புத்தகம்’ என்ற சொற்கள் தமிழில் பயன்படுத்தப்பட்டு வளர்ந்து வந்த விதத்தை ஒருவாறு ஊகித்து அறியலாம். இச்சொற்கள் தமிழ்நாட்டில் அச்சுப் பண்பாடு உருவான பிறகு வேறொரு தளத்தை அடைந்தன எனலாம். பல அறிஞர்கள் இரண்டு சொற்களையும் ஒரே நேரத்தில் வெவ்வேறு பொருளை உணர்த்த பயன்படுத்தினர். அது குறித்த விரிவான விவாதத்தை பகுதி இரண்டில் காணலாம்.

(அடுத்த மாதச் செய்திமடலில் பகுதி 2 வெளியிடப்படும்.)

Name Authority in Cataloguing

R. Prakash

Keywords: RDA, AACR, C. A Cutter, MARC, LCNAF, NACO

MARC cataloguing is basically the process of preparing entries for a library catalogue. It tells us what material a library contains on a given author or subject and where it may be found in a library. Three aspects are always given in the MARC record, namely description, access points and subject headings. MARC fields in 2XX to 5XX fields cover the descriptive portion of the MARC record. Fields 1XX and 7XX devoted to the access points and 6XX fields for the subject. The 1xx, 6xx and 7xx needs uniformity and consistency. That's why the concept of Name Authority was introduced by the international cataloguing community.Name authority control is one of the aspects of bibliographic cataloguing, ensuring consistency in the representation of names across the library database system. Before the advent of formal authority control, libraries managed names through manual catalogues, often resulting in inconsistencies in spelling, format, and order. Early librarians relied on handwritten ledgers and printed book catalogues, making it difficult to standardize names across different collections. As libraries grew, the need for systematic control of personal, corporate, and geographic names became evident.

Brief History of Cataloguing Rules:

Anthony Panizzi's 91 Rules (1841):
Developed for the British Museum Library, these rules aimed to provide consistency in catalogue entries, including author names.

C. A Cutter's Rules for a Dictionary Catalogue (1876): Introduced principles for the arrangement of names in catalogues, emphasizing uniformity.

Anglo-American Cataloguing Rules (AACR) (1967): Provided international guidelines for name authority control, leading to improved standardization in library catalogues.

RDA (Resource Description and Access) (2010): Replaced AACR2, offering more flexible and internationally applicable name authority guidelines.

Authority records describe the preferred forms of personal names and corporate bodies used as headings in a MARC record, along with cross-references from variant forms of the name. A name authority file often includes a few key facts about the entry to help ensure that the name being checked matches the entity represented by the authority record. It includes birth and death dates, and other details to distinguish the same name from another person. The authority record might include notes about works, nationality, or occupation to ensure that the heading is applied correctly.

Name authority control refers to the practice of establishing unique, standardized forms of names to be used across bibliographic records. This prevents variations, discrepancies, and ambiguities in cataloguing, thereby enhancing information retrieval. Authority records in MARC format ensure that a single form of a name is consistently applied to all relevant bibliographic entries.

Structure of a MARC Authority Record

There is a separate metadata schema for name authority. It is called MARC authority Format. It comprises several key fields that define and control the standardization of names. These fields include:

- **001 - Control Number:**
  A unique identifier for the authority record.
- **100 - Heading-Personal Name:**
  Stores the authorized form of a personal name.
- **110 - Heading-Corporate Name:**
  Records the standardized form of an organization's name.
- **151 - Heading-Geographic Name:**
  Represents the standardized form of a place name.
- **400, 410, 451 - See References:**
  Indicate variant forms of the name.

- **500, 510, 551 - See Also References:**
  Link related names.
- **670 - Source Data Found:**
  Cites sources that justify the choice of name form.

These fields ensure that users searching for an author, institution, or place can retrieve all related records under a single, standardized heading.

The authorized heading for the புதுமைப்பித்தன் as found in the Name Authority File maintained by Library of Congress.

LC control no.:	n 81033385
LCCN Permalink:	https://lccn.loc.gov/n81033385
Descriptive conventions:	rda
LC classification:	PL4758.9.P7
Personal name heading:	Putumaippittaṉ, 1906-1948
Variant(s):	Pudhumaipithan, 1906-1948
	Pudumai Pittan, 1906-1948
	Pudumaippiththan, 1906-1948
	Pudumeĭpittan, 1906-1948
	Putumai-p-pittaṉ, 1906-1948
	Putumaip Pittaṉ, 1906-1948
	Vi., Co., 1906-1948
	Viruttācalam, C., 1906-1948
	Viruttācalam, Co., 1906-1948
	Vriddhachalam, S., 1906-1948
Associated place:	Tamil Nadu (India)
Birth date:	1906
Death date:	1948
Field of activity:	Tamil fiction
Profession or occupation:	Authors, Tamil
Found in:	Author's Putumaippittaṉ kataikaḷ, 1966.
	Pudumeĭpittan, 1993.
	Kaṇmaṇi Kamalāvukku, 1994: p. 10 (Co. Vi.) cover (Co. Viruttācalam)
	His Ciṟṟaṉṉai, 1964: t.p. (Putumaippittan)
	Putumaippittaṉ paṟṟi Rakunātaṉ, 2005: t.p. verso (Pudumaippiththan)
	Putumaippittaṉ, muttukkaḷ pattu, 2007: t.p. (Putumaippittaṉ) t.p. verso (Pudhumaipithan)
Associated language:	tam

Importance of Name Authority in MARC

1. **Consistency in Cataloguing:** Without name authority control, variations in name spellings, abbreviations, and formats can cause fragmentation in search results. Standardized authority records maintain uniformity in bibliographic databases.
2. **Enhanced Search and Retrieval:** Users searching for a particular author or corporate entity benefit from name authority control, as it ensures that all works by the same entity are linked under a single heading.
3. **Interoperability Across Libraries:** Libraries that use MARC authority records, such as those following Library of Congress standards, ensure compatibility and consistency across library networks, enabling resource sharing and cooperative cataloguing.

4. **Disambiguation of Similar Names:** Many authors or corporate bodies may have similar or identical names. Authority records include additional distinguishing information, such as birth and death dates, corporate location, or field of activity, to clarify identities.

Authority Files: Library of Congress Name Authority File (LCNAF)

Introduction

The Library of Congress Name Authority File (LCNAF) is a crucial tool in bibliographic cataloguing, ensuring consistency and accuracy in the representation of personal, corporate, conference, and geographic names. Managed by the Library of Congress (LC), LCNAF standardizes name forms across libraries worldwide, facilitating efficient information retrieval and resource sharing.

The LCNAF originated in the early 20th century as part of the Library of Congress's efforts to standardize cataloguing practices. Key milestones in its development include:

- **1910s:** The Library of Congress begins compiling standardized name entries.
- **1960s:** The introduction of MARC facilitates electronic authority control.
- **1976:** The Name Authority Cooperative (NACO) program is launched, allowing libraries to contribute to the authority file.

Challenges in Name Authority Control

While name authority control in MARC offers numerous benefits, it also presents challenges:

- **Updating Records:** Changes in names (e.g., due to marriage, corporate mergers) require continuous updating of authority records.
- **Multilingual Considerations:** Names appearing in different scripts or transliterations must be accommodated while maintaining cross-language consistency.
- **Cataloguing Workload:** Creating and maintaining authority records requires skilled cataloguers.

Conclusion:

Name authority control in MARC plays a vital role in maintaining the integrity and usability of library catalogues. By standardizing personal, corporate, and geographic names, MARC authority records enable efficient cataloguing, accurate information retrieval, and seamless interoperability among libraries. Despite its challenges, name authority control remains indispensable in modern bibliographic practices, ensuring that library users can access information accurately and efficiently. NACO Name Authority Institute located at the Library of Congress, Washington DC provides training on Name authorities. RMRL got this training in 2006.

யூனிகோடு எனும் ஒருங்குறி

ரஞ்சித் ரூஸோ, தமிழ் எழுத்துருக் கூடம்

முதன்மைச் சொற்கள்: குறியாக்க அமைப்பு, Encoding System, யூனிகோடு, கணினி

பகுதி - 1

கல்வெட்டுகள், பானைக்கீறல்கள், பனையோலைகள், காகிதங்கள் ஆகியவற்றில் எழுதப்பட்ட தமிழ் 18ஆம் நூற்றாண்டில் அச்சுக்கும், 20ஆம் நூற்றாண்டில் கணினிக்கும், 21ம் நூற்றாண்டில் செயற்கை நுண்ணறிவுக்கும் வந்துவிட்டது. தற்காலத்தில் நம் எழுத்தை ஒரு கணினிக்கு புரியும் படியான குறியீடுகளாக மாற்ற பயன்படுத்தப்படும் முறையைக் குறியாக்க அமைப்பு (Encoding System) எனலாம்.

இதுவரை தமிழுக்கென TACE, TAM, TAB, Shreelipi, SaiIndira, TSCII, Chenet Platinum, Bamini எனக் கிட்டத்தட்ட 45 கணினி குறியாக்க அமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. ஆனால், ஒருவர் TACE முறையில் கணினியில் எழுதியிருந்தால் அதை TAM, TAB போன்ற மற்ற முறைகளால் படிக்க இயலாது. அதுமட்டுமல்ல; தமிழ் தவிர மற்ற மொழி வாக்கியங்கள் இருந்தால் அவற்றை படிக்க இயலாது. பல்வேறு மொழியினர், நாட்டினர், அல்லது ஒரே மொழிக்குழுவில் உள்ள பல்வேறு அமைப்புகள் ஒவ்வொரு காலத்திற்கும், வெவ்வேறு தொழில்நுட்பத்திற்கும் ஏற்றார்போல குறியாக்க அமைப்புகளை உருவாக்குவதால் கணினியில் ஒரு மொழியைப் படிக்கவும் எழுதவும் அல்லது ஒரு ஆவணத்தைப் பாதுகாக்கவும் சிக்கல் இருந்துவந்தது. இந்தச் சிக்கலைத் தீர்த்து வைப்பதற்காகத் தரப்படுத்தப்பட்ட குறியாக்க முறை (Standatailzed Encoding System) தேவைப்பட்டது. அதுதான் யூனிகோடு எனும் ஒருங்குறி.

பல்வேறு மொழியினரால், நாட்டினரால் அங்கீகரிக்கப்படும் எழுத்துக் குறியீட்டுத் தரநிலையாக யூனிகோடு செயல்படுகிறது. இதன் குறியாக்கம் எல்லாக் கருவிகளிலும், மென்பொருட்களிலும், இயக்கமுறைமைகளிலும் (Operating systems), எல்லாத் தளங்களிலும், மொழிகளிலும் இயங்கக்கூடியதாகும். இதற்கு முன்பு இருந்த கட்டமைப்புகள் இத்தகைய பொதுத்தன்மையை அல்லது தரநிலையைச் சாத்தியப்படுத்தவில்லை. அவை ஏதேனும் ஒரு வரம்புக்குள் முடங்கியிருந்தன.

புவியியல் எல்லைகளுக்கு அப்பால் இணையம் வழி தகவல் சென்றடையும் இக்காலக்கட்டத்தில் ஒரு மொழிக்கு மட்டும் அல்லது மொழிக்குழுவுக்கு மட்டும் ஒத்துப்போகும் குறியாக்க அமைப்பு என்பது தகவல் பரிமாற்றத்திற்குத் தடையாக இருக்கிறது. இதற்கான தீர்வாக யூனிகோடு அமைகிறது. கிட்டத்தட்ட அனைத்து எழுத்துமுறைகளில் இருக்கும் எழுத்துகளுக்கு இடமளிக்கக்கூடிய விரிவான தரநிலையை யூனிகோடு வழங்குகிறது. இதன்மூலம் ஒரு தகவலை அனுப்புநர், பெறுநர் ஆகிய இருவருடைய கருவிகளின் குறியாக்க அமைப்புகள் குறித்து பொருட்படுத்தாமல் எழுத்துகளைப் பரிமாறிக்கொள்ளவதை யூனிகோடு உறுதிசெய்கிறது.

தமிழ் மொழிக்கு யூனிகோடு மிகவும் அவசியமாகிறது. இந்தியா, இலங்கை, சிங்கப்பூர், மலேசியா எனப் பல்வேறு நாடுகளில் பல கோடி மக்களால் பயன்படுத்தப்படும் மொழி தமிழ். எல்லைகளைக் கடந்து கணினிக்குள் தமிழைக் கொண்டுசேர்க்க நிஜ உலகத்திற்கும், டிஜிட்டல் உலகத்திற்கும் இடையில் ஒரு நிலையான கட்டமைப்புத் தேவைப்படுகிறது. அத்தகைய கட்டமைப்பை உருவாக்கி தமிழுக்கான டிஜிட்டல் பிரதிநிதியாக யூனிகோடு செயல்படுகிறது.

Tamil[1][2]

Official Unicode Consortium code chart (PDF)

	0	1	2	3	4	5	6	7	8	9	A	B	C	D	E	F
U+0B8x			◌ஂ	ஃ		அ	ஆ	இ	ஈ	உ	ஊ				எ	ஏ
U+0B9x	ஐ		ஒ	ஓ	ஔ	க				ங	ச		ஜ		ஞ	ட
U+0BAx				ண	த				ந	ன	ப				ம	ய
U+0BBx	ர	ற	ல	ள	ழ	வ	ஶ	ஷ	ஸ	ஹ					◌ா	◌ி
U+0BCx	◌ீ	◌ு	◌ூ				◌ெ	◌ே	◌ை		◌ொ	◌ோ	◌ௌ	◌்		
U+0BDx	ௐ							◌ௗ								
U+0BEx							௦	௧	௨	௩	௪	௫	௬	௭	௮	௯
U+0BFx	௰	௱	௲	௳	௴	௵	௶	௷	௸	௹	௺					

Notes

1. ^ As of Unicode version 16.0
2. ^ Grey areas indicate non-assigned code points

தரப்படுத்தப்பட்ட குறியாக்கத்தை வழங்குவதன் மூலம் செயலிகள், வலைத்தளங்கள், சமூக ஊடகங்கள், மின்னஞ்சல் சேவைகள் எனப் பல்வேறு மென்பொருட்களிலும், இணையதளங்களிலும் தமிழைப் பயன்படுத்துவதை எளிதாக்குகிறது யூனிகோடு. மேலும், தமிழ் ஆவணங்களும், செயலிகளும் ஒரே நேரத்தில் பல மொழிகளின் எழுத்துகளைக் கையாள வேண்டிய பன்மொழி கணினி சூழலைச் சாத்தியப்படுத்துவதில் யூனிகோடு முக்கிய பங்கு வகிக்கிறது.

எனவே, தமிழ்க் கணினிச் சூழலில் யூனிகோடு வெறும் தொழில்நுட்ப மேம்பாடு மட்டுமல்ல; இது டிஜிட்டல் முறையில் தமிழைப் பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் உலகளாவிய டிஜிட்டல் தளத்தில் தமிழ் திறம்பட பங்கேற்கவும் காரணமாக அமைகிறது. யூனிகோடு போன்ற தரப்படுத்தப்பட்ட குறியாக்கத்தின் உதவியால் தகவல் தொடர்பு, எழுத்துப் படைப்பாக்கம் (content creation), எளிமையான மென்பொருள் பயன்பாடு போன்றவற்றில் எந்தவித தடையும் இல்லாமல் மேம்பட்டுக் கொண்டே செல்கிறது தமிழ் மொழி. சமகால டிஜிட்டல் உலகில் தமிழின் தெரிவுநிலையும் பயன்பாடும் அதிகரிக்க, தமிழ்ச் செழிக்க யூனிகோடு தேவையான அடித்தளத்தை வழங்குகிறது.

யூனிகோடு எப்படி இயங்குகிறது?

யூனிகோடு கண்டுபிடித்தது யார்?

யூனிகோடு என்பது வெறும் குறியாக்க அமைப்பு முறையா, அல்லது அது ஒரு நிறுவனமான, அல்லது பல்வேறு நிறுவனங்களின் கூட்டமைப்பா?

எந்தெந்த நாடுகள் யூனிகோடு முறையை ஏற்றுக்கொள்கிறது. தமிழ்நாடு எப்படி, எப்போது இதை ஏற்றுக்கொண்டது?

இதுபோன்ற கேள்விகளுக்கு அடுத்த பகுதிகளில் பதிலளிக்கப்படும். வாசகர்களுக்கு ஏதேனும் கேள்விகள் இருந்தால் கேட்கலாம். அதற்கும் பதிலளிக்கப்படும்.

Understanding the purpose of digitization

M. Manikanda Subbu

Keywords: Digitization, Preservation,Aarchival image, Metadata, OCR,



Preserving knowledge is essential for any society. Knowledge is passed down to future generations through preservation, and the medium of preservation plays a vital role in this process. The longest-surviving documents are those engraved in stone. Even today, we can see ancient inscriptions carved on temple walls and rocks that have endured for over a thousand years. However, stone is not an ideal medium for preserving large amounts of information, nor is it portable. Palm leaves were one of the best mediums for preserving knowledge, but palm-leaf manuscripts have been lost over time due to factors such as aging and climate. With the advent of print technology, much of the knowledge preserved in palm-leaf manuscripts, including Sangam literature, folk traditions, and medicinal knowledge, has been transferred to books.

Paper is a very fragile material, making it unsuitable for long-term preservation. It must be reprinted continuously or preserved in another format. In the 20th century, there was a global effort to safeguard the world’s knowledge. Microfilm emerged as one of the best preservation techniques, developed during the world wars and later adopted for preserving the content of books, magazines, and other materials. Even today, it is considered one of the most reliable methods for long-term preservation. However, the difficulty in sourcing raw materials and the high cost of the process have made it a less preferred method for preservation in many archives worldwide.



With the development of digital technology over the past 20 years, many devices are now capable of capturing images. From powerful overhead scanners and portable flatbed scanners to DSLR cameras and handheld mobile phones, there are numerous options for digitizing books. However, not all images meet the standards of archival quality. Archival images are high-resolution images captured for long-term preservation, and they must retain their quality and integrity over time. Several factors must be considered when capturing archival images. Before exploring these factors, it is essential to understand the importance of archival images.

Archival images are primarily captured for long term preservation, that is, to pass on the knowledge to the next generation. Hence, it is crucial to capture images in a format and quality which will survive over time and technological advancements. Hence, the archival community has developed certain standards for capturing archival images.

Some of the key things to be considered while capturing archival images are

Format - It has to be lossless format. TIFF format is accepted as archival quality

Resolution - High-resolution images are mandatory for archival images as they contains most of the information as the original object

Colour - Earlier, grayscale was adopted, but now, color images are preferred. However, the images must be taken after white balance and colour correction.

The archival images don't undergo editing, such as color correction or cropping, after the image is taken. It is important to note that the archival image should be in TIFF and not in any other formats such as JPG or PNG.This is because TIFF is a non-compressed format, which contains the maximum information of the object. However, other formats (such as jpg or png) are compressed formats, which store only minimum information about the object, mainly to conserve storage space. These are good for viewing and sharing through the internet. However, they are unsuitable for archiving, as the images of this format are generated based on a compression algorithm. Also, they are not stable enough to be preserved long-term. They may get corrupted while transferring, copying or editing. Also, they are not suitable for Optical Character Recognition (OCR).

However, these compressed formats are useful in dissemination. As the size of these images is low, they are ideal for setting up digital libraries. Using the compressed, low-size images will help to quickly load the files while reading ebooks through mobiles. In such scenarios, the JPG images are easily converted from the TIFF images through batch processing. So, the archives will have high quality TIFF images and also compressed quality dissemination images.

Through this we can understand that the objective of digitization in an archive is mainly creation of archival images, which is for long-term preservation and this is the archive's primary goal. Creating digital images and disseminating them through digital libraries are the byproducts of the archival process. The archival process doesn't end with creating archival images and sets of dissemination images.

Another important process in the archival pipeline is creating metadata for the images. Metadata is the one which makes the images meaningful. Metadata should be clear and comprehensive at the image level and folder level. Proper metadata enables easy retrieval of the files and folder in the future. Also, it would be helpful in creating a digital library, both in the archivist's perspective and the user's perspective. The metadata will be immensely helpful while the user searches for particular books or periodicals through the digital library portal. If the retrieval system is not good, the digitization process will become meaningless.

Long-term preservation demands proper long-term storage of images. The storage may be either local or cloud storage. Also, it is necessary to store the images in more than one location. This is very helpful in case of natural calamities or disasters. Maintaining a proper storage involves a recurring cost for the archives and requires continuous monitoring. Hence, the process of archiving doesn't end with just digitizing the material or creating the metadata or after setting up the digital library. It is a never-ending process as we have to preserve the digital images in proper storages forever.

Upcoming events at RMRL

17 - 04 - 2025, மாலை 5.30 மணி : சிவஞானபோதமும் மெய்கண்டார் மரபும்

முற்கால சைவத்தின் மெய்யியல் போக்கையும் 13ஆம் நூற்றாண்டிற்கு பின்னர் சைவ மெய்யியல் மரபில் ஏற்பட்ட மாற்றங்களில் மெய்கண்ட தேவரின் பங்களிப்பையும் பற்றி உரையாற்றுகிறார்

சிவத்திரு. செ. முருகவேள் (நூலாசிரியர்: சுத்த சைவம் மற்றும் தமிழில் ரௌரவ ஆகமம்)

இடம்: ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம்

19 - 04 - 2025, 10.00 am : 75-Year Journey of the Constitution of India

Rakesh Endowment Lecture for Justice and Equity

Lecture by Hon’ble Mr. Justice Jasti Chelameswar

Venue: Museum Theatre, Museum Compound, Pantheon Road, Egmore, Chennai - 08